| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 7/2020 |
| **DATE** | : | **05.03.2026** |
| **பெயர்** | : | **பத்மபிரியா** |
| **கணவர் பெயர்** | : | **கோபிநாத்** |

**வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

10. மோகன் வந்து சாட்சி சொல்லததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் மோகன் வராததை சுட்டி காட்டினோம். அவரது மருமகள் சாட்சியம் செல்லாது என்று எதன் அடிப்படையில் ஆட்சபனை தெரிவிக்கிறோம் என்றால் அவர் உயிருடன் உள்ளார் என்பதால். காலதோஷம் இருப்பதாக எதை சுட்டிகாட்டுகிறோம் என்றால் வழக்கறிஞர் இருவர் தரப்பிலும் கால தாமதம் இருப்பதாக குறிப்பிட்டார். எனது தாயாரை ஏமாற்றி வாங்கியதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேன் என்றால் சரி. எனது பிராமண பத்திரத்தில் கொடை பத்திரம் எது என்று எனக்கு ஞாபகம் இல்லை. தான பத்திரத்தில் முதலில் எழுதப்பட்டதா அல்லது ரத்து பத்திரம் முதலில் எழுதப்பட்டதா என்றால் தேதி குறிப்பிட்டால் தான் விவரம் ஞாபகம் வரும்.

11. விடுதலை பத்திரத்தை ரத்து செய்யும் எனது தாயார் உடன் இருந்தார். எனது தாயார் எழுதிய ரத்து பத்திரத்தில் என்ன விவரங்கள் குறிப்பிடப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ. 1 , 2 திருமண அழைப்பிதழ்களை வைத்து தான் நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்ததாக இருக்கிறோம் என்றால் சரிதான். நான் வில்லங்க சான்றிதழை எப்போது பார்த்தேன் என்றால் 2009லேயே பார்த்துவிட்டோம். அதற்கு பிறகு 6 வருடங்கள் பிறகுதான் ரத்து ஆவணம் எழுதினோம். பி.வா.சா. ஆ. 4 புகைப்படங்களில் தேதி குறிப்பிட்டதா

என்றால் புகைப்படங்களில் உள்ளதா என்று தெரியாது, ஆல்பத்தில் உள்ளது. இந்த புகைப்படங்கள் மற்றும் ஆல்பத்தை நாங்கள் தான் தயாரித்தோம்.

12. 2015லிருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை வரி எதாவது செலுத்தினோமா என்றால் இல்லை. 2009லிருந்து 2015 வரை நான் எதாவது வரி கட்டினேனா என்றால் எனது தாயார் கட்டினார். எந்த வருடம் எனது தாயார் கட்டினார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாயார் எங்களுடன் தான் அதிக காலம் வசித்தார். அந்த வரி ரசீதுகள் எதாவது எங்களிடம் உள்ளதா என்றால் இல்லை. ரத்து செய்வதற்கு முன்பு முறையான அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை. ரத்து செய்ததற்கு பிறகு எழுத்துப்பூர்வமான அறவிப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. வாய்மொழியாக தெரிவித்தோம். வாய்மொழியாக தெரிவித்த விவரத்தை எனது பதிலுரையிலோ பிராமண வாக்குமூலத்திலோ தெரிவிக்காதற்கு காரணம் என்ன என்றால் எழுத்துப்பூர்வமான ஆவணம் இல்லாததால் செல்லாது என்று தெரிவித்தார்கள். எனது தாயாரின் இறுதி சடங்குகள் மற்றும் காரியங்கள் குறித்த ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனது தாயாரின் இறுதிச் சடங்களை மோகன் தான் செய்தார்.

13. தனிச்சையாக நாங்கள் எழுதிய ரத்து ஆவணங்கள் செல்லாது என்று சொன்னால் சரி அல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram

Digitally signed by FANNY RAJAN